## இன்று (பிப்ரவரி 23) முதல் மார்ச் 8 வரை

# ‘வெல்லும் தமிழ்ப் பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை’

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிக்கை!

2026 ஜனவரி 13 அன்று சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கத்தில் நடைபெற்ற “தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில் **‘வெல்லும் தமிழ்ப் பெண்கள் வீடு வீடாகப் பரப்புரை’** நடத்திட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

‘திராவிட மாடல்’ அரசு அமைந்த பிறகு பெண்களுக்கான **‘கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்’ - ‘விடியல் பயணம்’ - ‘தோழி விடுதிகள்’ - ‘புதுமை பெண் திட்டம்’** உள்ளிட்ட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு, மகளிருக்கான ஆட்சியென நடைபெற்று வருகிறது. நமது சாதனைத் திட்டங்களால் பெண்கள் வெல்லும் தமிழ்ப் பெண்களாக உயர்ந்துள்ளனர். பெண்கள் பயனாளிகள் மட்டுமல்ல, மாநில வளர்ச்சியின் பங்குதாரர்கள் என்ற சீரிய சிந்தனையுடன் செயலாற்றும் ‘திராவிட மாடல் அரசு’ நிறைவேற்றியுள்ள நலத் திட்டங்களையும் - ‘பெண்களின் முன்னேற்றமே தமிழ்ச் சமூகத்தின் முன்னேற்றம்’ எனும் கொள்கை உறுதியுடன் பெண்களுக்கான எண்ணற்ற பல திட்டங்களையும் - சாதனைகளையும் ஒவ்வொரு வீட்டிலும் உள்ள மகளிரிடம் எடுத்து சென்று சேர்ப்பதே இப்பரப்புரையின் நோக்கமாக இருக்க வேண்டும்.

இப்பரப்புரையை, வீடு வீடாகச் சென்று மேற்கொள்ளும் விதமாக தி.மு. கழகத்தின் சார்பில் ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் மாவட்டச் செயலாளர்களால் வழங்கப்பட்டுள்ள பட்டியலின் அடிப்படையில், 10 மகளிரை கொண்ட குழு உருவாக்கப்பட்டுள்ளது. அக்குழுவின் சார்பில் ஒரு உறுப்பினர் வீதம் தேர்வு செய்யப்பட்டு தொகுதி அளவிலான பயிற்சிக் கூட்டங்களை நடத்திட வேண்டும். “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” பரப்புரைக்கான சட்டமன்றத் தொகுதி வாரியான பயிற்சிக் கூட்டத்தை வரும் பிப்ரவரி 20, 21 மற்றும் 22-ஆம் தேதிகளுக்குள் அனைத்து தொகுதிகளிலும் நடத்தி முடித்திட வேண்டும்.

இப்பயிற்சியை, சட்டமன்றத் தொகுதி மகளிர் அணி பொறுப்பாளர்கள் வழங்குவர். பயிற்சிக் கூட்டத்தில் வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரை பற்றிய முழு பயிற்சியும் வாக்குச்சாவடி அளவிலான மகளிர் குழு பொறுப்பாளர்களுக்கு அளிக்கப்படும். அதன் பிறகு அவர்கள் ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் உள்ள இதர உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்து பரப்புரையைத் தொடங்கிட வேண்டும்.

தேர்தலை காரணமாக வைத்து, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தையே முடக்குவதற்கான ஒன்றிய பா.ஜ.க. - அடிமை அ.தி.மு.க.வின் சூழ்ச்சிகளை முறியடித்து, “ நீ ஆயிரம் ரூபாயை நிறுத்த முயற்சித்தால், நான் என் மக்களுக்கு ரூபாய் ஐந்தாயிரமாக தருவேன்” என சூளுரைத்து பிப்ரவரி, மார்ச், ஏப்ரல் ஆகிய மூன்று மாதங்களுக்கான தொகையினை முன்பணமாக ரூ.3000/, கோடைக் கால சிறப்புத் தொகுப்பு ரூ.2,000/ என மொத்தம் ரூ.5000/த்தினை தமிழ்நாட்டு பெண்களுக்கு வழங்கிய திராவிட மாடல் அரசின் சாதனைகளையும் வீடு வீடாக எடுத்துச் சொல்ல வேண்டும். அதுமட்டுமின்றி, ‘திராவிடமாடல் 2.0’ ஆட்சியில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மாதம் ரூ.2,000/மாக உயர்த்தி வழங்கப்படும் என்ற எனது உறுதிமொழியையும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை தடையின்றி தொடர, கழக ஆட்சி தொடர்வது அவசியம் என்பதையும் மகளிர்க்கு உணர்த்திட வேண்டும்.

**இன்று (பிப்ரவரி 23) முதல் “வெல்லும் தமிழ்பெண்கள் - வீடு வீடாகப் பரப்புரை”** தொடங்கி, உலக மகளிர் தினமான மார்ச் 8-ஆம் தேதிக்குள் அனைத்து வீடுகளையும் சென்றடையும் வகையில் சிறப்பாக நடத்திட வேண்டும்.

கழகத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க கழகத்தின் வெற்றியை உறுதி செய்து மீண்டும் தி.மு.கழகத்தை ஆட்சிக் கட்டிலில் அமர்த்திட புறப்பட்டுவிட்டது இந்த ஸ்டாலினின் மகளிர் படை என இப்பரப்புரை சிறப்புடன் அமைந்திட வேண்டும்.

வெல்லும் தமிழ்ப் பெண்கள் பரப்புரைக்கான அனைத்து ஏற்பாடுகளையும் மண்டல பொறுப்பாளர்கள் -பொறுப்பு அமைச்சர்கள் - மாவட்டக் கழகச் செயலாளர்/பொறுப்பாளர்கள் செய்துதர வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்,
தி.மு.க.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18

## சென்னை விழாவில் உலக அளவிலான மொழியியல் அறிஞர்கள், பேராசிரியர்கள் பங்கேற்பு!

# தமிழ் - இந்திய - ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் 4-ஆம் தொகுதி நூல்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டு வாழ்த்துரை வழங்கினார்!







**சென்னை, பிப். 23–**

**சென்னை, விக்டோரியா ஹாலில் தமிழ் மற்றும் இந்திய – ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் 4–ஆம் தொகுதி நூலை, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நேற்று வெளியிட்டு வாழ்த்திப் பேசினார். இதில் சர்வதேச அளவிலான மொழியியல் அறிஞர்கள், பேராசிரியர்கள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு:

தமிழ் மற்றும் இந்திய, ஐரோப்பிய மொழிகளின் வேர்ச்சொல் ஒப்பீட்டு அகராதியின் நான்காம் தொகுதி நூலை, இங்கே உங்களின் முன்னிலையில் வரலாற்றுச் சிறப்புக்குரிய விக்டோரியா ஹாலில் வெளியிடுவதில் மிகுந்த பெருமையடைகிறேன், மகிழ்ச்சியடைகின்றேன்.

**தாய்மொழி தினம்**

இந்த நிகழ்ச்சி தமிழ்மொழிக்கு முக்கியமான பங்களிப்பை வழங்குவதுடன், மொழியியல் ஆராய்ச்சிக்கும் கணிசமான பங்களிப்பாக அமைந்துள்ளது. அதிலும் எனக்கு கூடுதல் பெருமைக்குரிய நிகழ்ச்சி என்னவென்றால், இன்றைக்கு சர்வதேச தாய்மொழி தினம். இந்த நாளில் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில் நான் அளவற்ற மகிழ்ச்சியும் பெருமையும் அடைகிறேன். இந்த நேரத்தில், இன்னொரு செய்தியையும் உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

தந்தை பெரியார் அவர்கள் நடத்திய முதல் மொழிப்போர் 1937, 38-ஆம் ஆண்டில் நடந்தது. அப்போது பள்ளிக்கூடங்களில் இந்தி கட்டாயப் பாடமாக அறிவிக்கப்பட்டதை எதிர்த்து அந்தப் போராட்டம், மொழிப்போர் நடந்தது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தன் 14-ஆவது வயதில் திருவாரூரில் அந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டார். அந்த இந்தித் திணிப்பு என்கின்ற அறிவிப்பு, அதிகாரப்பூர்வமாக ரத்து செய்யப்பட்ட நாள் இதே பிப்ரவரி 21, 1940-ஆம் ஆண்டு. எனவே மொழி ரீதியாகப் பல சிறப்புகளைக் கொண்ட இந்த நாளில் இந்தச் சிறப்பான நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டு நடந்து கொண்டிருக்கிறது.

**ஒரே பதில் இதுதான்**

பல பேர் இன்னும் சந்தேகத்தோடு கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்கள் எல்லாம் இந்தியை ஏற்றுக்கொண்டன. ஆனால், தமிழ்நாடு மட்டும் ஏன் இன்னும் எதிர்த்துக் கொண்டிருக்கிறது என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் நான் சொல்ல விரும்புகின்ற ஒரே பதில் இதுதான். மற்ற மொழிகளின் துணையில்லாமல், கலப்பில்லாமல், தனித்து இயங்குகின்ற ஆற்றல், தமிழ் மொழிக்கு நிச்சயமாக எப்பொழுதுமே உண்டு. அதைத்தான் கால்டுவெல் சொன்னார், அதையொட்டி, மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் போன்றவர்களும் சொன்னார்கள்.

இன்றைக்கு தமிழ் மொழியின் சிறப்பை, தொன்மையை உலகமே தெரிந்துகொள்கின்ற வகையில், இந்த நூல் தொகுப்புகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த நூல்கள் எல்லாம் மிகப்பெரிய ஆய்விற்குப் பிறகு கொண்டு வரப்பட்டிருக்கின்றன. தமிழ் மொழியில் உள்ள சொற்களை எல்லாம் ஆராய்ந்து, அதன் அமைப்பு, பிறப்பு, பொருள் பற்றி எல்லாம் ஆய்வு செய்து, அதேபோல இந்தோ-ஐரோப்பிய மொழிகளான லத்தீன், கிரீக், ஜெர்மன், பெர்சியன், சமஸ்கிருத சொற்களையும் ஆய்வு செய்து, இந்த மொழிகளில் இருக்கக்கூடிய வேர்ச்சொற்களை ஒப்பிட்டுப் பார்ப்பதுதான் இந்த 12 நூல் தொகுதிகள்.

**சர்வதேசப் புத்தகக் காட்சி**

இந்த அகராதியின் முதல் தொகுதி, நாம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 25 மார்ச் 2025 அன்று வெளியிடப்பட்டது. இரண்டாவது மற்றும் மூன்றாவது தொகுதிகள் கடந்த மாதம் சென்னை சர்வதேசப் புத்தகக் காட்சியில் வெளியிடப்பட்டன. இன்று, இந்த நிகழ்ச்சியில் நானே நான்காவது தொகுதியை வெளியிடும் பெருமையைப் பெற்றுள்ளேன். மீதமுள்ள தொகுதிகளும் திட்டமிட்ட கால அட்டவணைப்படி வெளியிடப்படும்.

இந்த நூல்களை எல்லாம் தமிழ்நாடு அரசின் `மொழி ஞாயிறு’ தேவநேயப் பாவாணர் விருதைப் பெற்ற மதிப்பிற்குரிய அரசேந்திரன் அவர்கள் பதிப்பாசிரியராக இருந்து, இந்த நூல்களைக் கொண்டு வந்திருக்கிறார். இந்த நேரத்தில் அரசேந்திரன் அவர்களுக்கும் அவருக்கு உறுதுணையாக இருந்த அத்தனை பேருக்கும் என்னுடைய பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழியின் பழமையை, பெருமையை நிலைநாட்டுவதற்கு இந்த மாதிரியான ஆராய்ச்சிகள் மிக மிக அவசியம். இது காலத்தின் கட்டாயம். திராவிட இயக்கம் தமிழுக்கு என்ன செய்தது என்று பல பேர் கேட்கிறார்கள். அவர்களுக்கு நான் சொல்லுகின்ற பதில் தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கைதான் எப்பொழுதும் இருக்கும் என்பதைக் கொண்டு வந்தது திராவிட முன்னேற்றக் கழகம். இந்திக்கு இங்கே இடமில்லை என்பதை உறுதி செய்தது தி.மு.க அரசு. நம் மாநிலத்திற்கு `தமிழ்நாடு’ என்ற பெயரை வைத்ததும் நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான்.

**செம்மொழி அந்தஸ்து**

தமிழ் மொழிக்குச் செம்மொழி அந்தஸ்தைப் பெற்றுத் தந்ததும் தி.மு.க அரசு. நம் திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, தமிழறிஞர்களின் நூல்களை எல்லாம் நம் முதலமைச்சர் அவர்கள் நாட்டுடைமையாக்கி இருக்கிறார்கள். அதேபோல முத்தமிழறிஞர் மொழிபெயர்ப்புத் திட்டத்தில் 160 நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. திசைதோறும் திராவிடம் திட்டத்தில் இதுவரை 74 நூல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. தமிழ் எழுத்தாளர்களுக்குக் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகளும் ஒதுக்கப்படுகின்றன. அதேபோல் மாவட்டந்தோறும் புத்தகத் திருவிழாக்கள், சென்னையில் பன்னாட்டுப் புத்தகத் திருவிழா, இப்படித் தமிழ் மொழி வளர்ச்சிக்காக ஏராளமான பணிகளை நம் திராவிட மாடல் அரசு தொடர்ந்து செய்து வருகிறது. அந்த வரிசையில், இந்த வேர்ச்சொல் நூல்கள் வெளிவருவது மிகப் பெரிய பெருமைக்குரிய ஒரு விஷயம்.

இந்த நேரத்தில், இந்த அகராதித் தொடர் வரிசையில், வெளியான தொகுதிகள் பற்றிய சர்வதேச கருத்தரங்கு மிகச் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற வேண்டும் என வாழ்த்துகிறேன். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மூத்த அரசு அதிகாரிகள், ஆக்ஸ்போர்டு யுனிவர்சிட்டி பிரஸ் பிரதிநிதிகள், தமிழறிஞர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவர்கள் ஆகிய அனைவருக்கும் இந்த அருமையான நிகழ்வில் கலந்து கொண்டதற்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**வேர்ச்சொல் அகராதி**

`தமிழும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளும் - ஒப்பியல் வேர்ச்சொல் அகராதி’ என்ற இந்த முக்கியமான நூலின் நான்காவது தொகுதியை உருவாக்க அயராது உழைத்த ஒவ்வொருவருக்கும் எனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவிக்கிறேன்.

உங்கள் அறிவுப் பயணத்தில் தொடர்ந்து சிறப்பான வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறேன். இந்த சிறப்புமிக்க பணி, மொழியியல் ஆராய்ச்சியை மேலும் வளப்படுத்தும் என நம்புகிறேன். மொழிகளுக்கிடையேயான பழமையான, ஆழமான வரலாற்றுத் தொடர்புகளை, இன்னும் தெளிவாகப் புரிந்துகொள்ள இந்த முயற்சி உதவும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

**பங்கேற்றவர்கள்**

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன், பி.கே.சேகர் பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாநகராட்சி மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் பரந்தாமன், பிரபாகர்ராஜா, துணை மேயர் மகேஷ்குமார், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ்., பள்ளிக் கல்வித்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் சந்திரமோகன் ஐ.ஏ.எஸ்., சென்னை மாநகராட்சி ஆணையர் குமரகுருபரன் ஐ.ஏ.எஸ்., உயர்கல்வித் துறை அரசு செயலாளர் சங்கர் ஐ.ஏ.எஸ்., தமிழ்நாடு பாடநூல் கழகத்தின் தலைவர் திண்டுக்கல் லியோனி, மானேஜிங் டைரக்டர் ஆர்த்தி ஐ.ஏ.எஸ்., டாக்டர் க்ளாஸ் பீட்டர் ஜோலர், பேராசிரியர் எமரிட்டஸ், டிப்பார்ட்மென்ட் ஆஃப் கல்ச்சர் ஸ்டடிஸ்,ஸ்டடிஸ் அண்ட் ஓரியன்டல் லாங்க்வேஜஸ், தி யூனிவர்சிட்டி ஆஃப் ஓஸ்லோ, சிகாகோ பல்கலைக்கழகத்தின் தெற்காசிய மொழிகள் மற்றும் நாகரிகத் துறையின் விசிட்டிங் புரொபசர் முனைவர் அண்ணாமலை, பத்மஸ்ரீ டாக்டர் அன்விதா அபி, தி எக்ஸ்பர்ட் கமிட்டி மெம்பர் யுனெஸ்கோ வேர்ல்ட் அட்லஸ் ஆஃப் லாங்க்வேஜஸ், டாக்டர் ஜி.அரசேந்திரன், மல்லிகா கோஷ், தி ப்ராஜக்ட் டைரக்டர் ஆஃப் ஆக்ஸ்ஃபோர்டு யூனிவர்சிட்டி பிரஸ் மாநகராட்சியிடன் நிலைக்குழு தலைவர்பாலவாக்கம்விஸ்வநாதன், தமிழ் வளர்ச்சித் துறையின் இயக்குநர் அவ்வை அருள், ஓவியர் ட்ரொட்ஸ்கி மருது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ரவிச்சந்திரன், ராஜீவ் காந்தி, ஜாக்டோ ஜியோ அமைப்பைச் சேர்ந்த தியாகராஜன் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.